செ.வெ.எண்: 505 நாள்:08.08.2020

**புதுக்கோட்டை மாவட்டத்தில் 4.58 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு 31.71 லட்சம் எண்ணிக்கையில் விலையில்லா முகக்கவசம் வழங்கப்பட உள்ளது.**

**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

---

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (08.08.2020) புதுக்கோட்டை நகராட்சி, அடப்பன்வயல் எம்எம்16 புதுக்கோட்டை நகர கூட்டுறவு பண்டக சாலையில் மின்னணு குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா முகக்கவசங்களை வழங்கினார். இந்நிகழ்வு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலுக்கிணங்க தமிழகத்தில் கொரோனா நோய் தொற்றை தடுக்கும் வகையில் நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் செயல்படுத்தாத வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொதுமக்களுக்கு விலையில்லா முகக்கவசம் வழங்கும் திட்டம் தமிழகத்தில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் இன்றையதினம் புதுக்கோட்டை அடப்பன்வயல் கூட்டுறவு பண்டக சாலையில் உள்ள 1,235 மின்னணு குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா மறுபயன்பாட்டு முகக்கவசம் தலா 2 வழங்கப்பட்டுள்ளது. மேலும் குடும்ப அட்டையிலுள்ள ஒவ்வொரு குடும்ப உறுப்பினர்களுக்கும் விலையில்லாமல் தலா 2 முகக்கவசங்கள் வழங்கப்பட உள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 1,017 நியாய விலைக்கடைகளில் மொத்தம் 4,58,934 மின்னணு குடும்ப அட்டைகள் உள்ளன. இந்த குடும்ப அட்டையில் உள்ள ஒவ்வொரு குடும்ப உறுப்பினர்களுக்கும் தலா 2 முகக்கவசங்கள் வீதம் மொத்தம் 31,71,900 முகக்கவசங்கள் வழங்கப்பட உள்ளன.

எனவே பொதுமக்கள் கொரோனா நோய் தொற்றிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளும் வகையில் முகக்கவசங்களை தவறாமல் அணிந்து சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டும். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், கூட்டுறவுத்துறை மண்டல இணைப்பதிவாளர் உமாமகேஸ்வரி, வருவாய் கோட்டாட்சியர் தண்டாயுதபாணி, நகராட்சி ஆணையர் ஜஹாங்கீர் பாஷா, நகராட்சி பொறியாளர் ஜீவாசுப்பிரமணியன், வட்டாட்சியர் முருகப்பன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**